GWOP :30/2023 C/w 31/2023

நாள் : 29.01.2026

ம.சா. : 2

பெயர் : அப்துல் பாஷித்துல் கபார்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணைக்கான பிரமாண பத்திரத்தில் எனக்கு தெரிந்த விவரங்களை சொல்லியுள்ளேன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள கணக்கு எண் எனக்கு தெரியாது. அந்த வங்கி கணக்கு எந்த தேதியில் தொடங்கப்பட்டது என்று நினைவில்லை. லாக்கரில் என்னென்ன நகைகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த சூழ்நிலையில் எதிர்மனுதார் அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும். அந்த விஷயம் குறித்து கூற என்னை அழைக்கவில்லை அதனால் எனக்கு தெரியாது. இன்று விசாரணைக்கு மனுதாரருடன் வந்தேன். அவர் என் மைத்துனர். எனக்கு மனுதாரர் சிறு குழந்தை முதல் பழக்கம். மனுதாரர் இல்லாத நேரத்தில் குழந்தைகளை மனுதாரர் வீட்டிலிருந்து அழைத்து சென்றதாக சொல்லப்படும் நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை. அது போல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் நான் மனுதாரரின் மைத்துனர் என்பதால் அவருக்காக நான் பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வங்கி லாக்கரில் 200 நகை வைத்திருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மைத்துனர் மனுதாரர் ஷெரிப் பொறையாரில்தான் வசித்து வருகிறார். அவரை காரைக்கால் காவல் துறையினர் காரைக்காலில் உள்ள வீட்டிலிருந்து அழைத்து வந்து திருச்சம்பள்ளி கோர்ட்டில் ஆஜர் செய்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் என் மைத்துனர் ஷெரிப் தான் அவர் உடனிருப்பவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில்

A Abd Bat

உள்ளவர் என் முன்னார் மனைவி அது **எசாஆ 7** ஆகும். நானும் என் மைத்துனரும் பல பெண்களின் வாழ்க்கையை கெடுப்பதையே தொழிலாக வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. என் மைத்துனருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு குழந்தை பிறந்து காரைக்காலில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மீது எதிர்மனுதாரர் குடும்ப வன்முறையின் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் வழங்க உத்தரவான விசயம் எனக்கு தெரியும். குழந்தைகளை அபகரித்து சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் வருமானம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு. அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியம் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை